19th April 1960]

SRI S. NAGARAJA MONIGAR : இந்தக் குற்றங்களைப் புரிகின்றவர்கள் நமது ராஜ்யத்திலுள்ள பிரஜைகளாகையினால், மத்திய சர்க்காருக்கு அநாவசியமாக செலவு ஏற்படுத்துவது நியாயம் ஆகுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காருக்கென்று தனியாக பிரஜைகள் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. A. RASHEED : May I know whether separate Railway courts have tried or only our courts have tried these ticketless travellers ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice to give a full answer. But there are Railway Magistrates who try cases relating to Railways.

SRI S. M. ANNAMALAI : ஸார், இதில் அபராதம் விதிக்கப்பட்ட தொகை எவ்வளவு? எவ்வளவு பேர்கள் சிறைக்கு அனுப்பப் பட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Zoological Gardens

* 721 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களிலே 1959-60-ம் ஆண்டில் மிருகக் காட்சி சாலைகள் அமைக்கப்படும் ?

(ஆ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே எந்தெந்த இடங்களிலே மிருகக் காட்சி சாலைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றன?

(இ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இதற்காகச் செலவிடப்பட ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) Nil.

(*c*) Does not arise.

Restoration of certain railway lines

* 722 *Q.*—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Union Government to relay the dismantled: (1) Tirupathur-Krishnagiri and (2) Morappur-Hosur Railway lines;

(*b*) if so, whether it is with the modifications like connecting Hosur, Bangalore and Krishnagiri-Palacode *via* Kaveripatnam;

(*c*) when they recommended and with what result; and

(*d*) whether it is the first time that the State Government have recommended ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) & (*d*) The restoration of these two lines was recommended to the Government of India in 1944 and 1947-48 but has not been pursued as a proposal was made in 1953 for providing a direct line

[19th April 1960

from Salem to Bangalore *via* Dharmapuri and Hosur, which would dispense with the need for the restoration of these two dismantled lines.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், சேலத்திலிருந்து பெங்களூருக்கு தர்மபுரி மார்க்கமாக சர்க்கார் ஒரு மார்க்கத்தை சிபாரிசு செய்திருப்பது வாஸ்தவமே. அது தொடர்ந்து பரிசீலனை நடந்து அந்த ரயில் பாதையும் கிடைக்கவில்லை. ஆனால் அது திருப்பத்தூர்—கிருஷ்ணகிரி மார்க்கமாக இருந்து எடுபட்ட ரயிலுக்கு வசதியாக ஏற்படாது. ஆகவே எந்த மார்க்கமும் இந்த ஜில்லாவிலே ஏற்படாமல், ஏற்கனவே இருந்த இரண்டு ரயில் பாதைகளும் போய் கஷ்டப்படுவதால், சர்க்கார் இதிலே அதிக சிரத்தை எடுத்து வற்புறுத்தி இந்தப் பாதையைப் போடுவதற்கு முன் வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முன்பு எடுக்கப்பட்ட லைன்களைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து, அதையெல்லாம் விட்டு விட்டு, சேலம்-பங்களூர் ரயில் போடுவதுதான் எல்லோருக்கும் வசதி அளிக்கக் கூடியது என்று மத்திய சர்க்காருடன் கலந்து ஆலோசித்து இந்த சர்க்கார் முடிவு செய்து, அதைப் இப்போது இந்த சர்க்கார் வற்புறுத்தி வருகிறது. ஆனால் மத்திய சர்க்காரிலும், ரயில்வே போர்டிலும் புதிய லைன்களைப் எடுத்துக் கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. எவ்வளவு தூரம் இந்த சர்க்காரினால் வற்புறுத்த முடிகிறதோ அவ்வளவு தூரம் வற்புறுத்தி வருகிறது. புதிதாக நம்முடைய ராஜ்யத்தில் ரயில்வே லைன்கள் ஓரளவாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சமீபத்திலே நடந்த தென் மண்டல சபைக் கூட்டத்திலே கூட வற்புறுத்தப்பட்டது.

Sri S. NAGARAJA MONIGAR : புதிதாக பிரேரணை செய்யப்பட்டிருக்கும் சேலம்-பங்களூர் மார்க்கம் புதிதாகப் போடும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா அல்லது எடுபட்ட லைன்களைத் திரும்பப் போடும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஏதாவது தனிச் சலுகை கொடுக்கப்படுகிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : புதிய லைனாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Sri P. M. MUNUSAMI GOUNDER : ஸார், எடுபட்ட பாதைகளையெல்லாம் போடவேண்டும் என்ற திட்டம் சர்க்காரில் இருந்து வருவதால் திருப்பத்தூர்-கிருஷ்ணகிரி, மொரப்பூர்—தர்மபுரி—ஹோசூர் இந்த லைன்களை 3-வது திட்டத்திலாவது சேர்க்க சர்க்கார் சிபார்சு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எடுபட்ட லைன்களையெல்லாம் போடும் திட்டம் மத்திய சர்க்காரிடம் இல்லை. சில லைன்கள் லாபகரமாக இல்லை என்று மத்திய சர்க்கார் புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எடுபட்ட லைன்களைப் போடவேண்டும் என்று வற்புருத்துவதைவிட புது லைனைப் போடவேண்டும் என்று வற்புருத்துவது தான் நல்லது என்று சொன்னேன்.

Sanitary Inspectors and Health Assistants, Kanyakumari district

* 723 *Q.*—**Sri T. S. RAMASWAMI** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Hon. the Minister for Revenue has received any memorandum from Sri T. T. Daniel, M.L.A. in July 1958 regarding the grievances of Sanitary Inspectors and Health Assistants of Kanyakumari district regarding the anomalies in the integration of their services and the failure to promote the Health Assistants to their legitimate rank;